செ.வெ.எண்: 263 நாள்: 21.04.2018

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு மற்றும் அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனம் இணைந்து நடத்திய குடிமை பணிகள் தின விழா மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு அரசு மற்றும் அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனம் இணைந்து நடத்திய குடிமை பணிகள் தின விழா மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில் இன்று (21.04.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பேசியதாவது:-

குடிமை பணிகள் 12 வது தின விழா இன்று தேசிய அளவில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தலைமையிலும், மாநில அளவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலும் நடைபெறுகிறது. முதல் முறையாக இந்த ஆண்டு முதல் மாவட்ட தலைநகரங்களிலும் நடத்தப்படுகிறது. இவ்விழாவில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட செயல்பாடுகள் மற்றும் முன்னேற்றம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த அறிவுருத்தப்பட்டுள்ளது. இவ்விழாவில் குழந்தைகள் பாதுகாப்பு, குழந்தைகள் வளர்ச்சி, குழந்தைகள் நலன், முன்பருவ கல்வி தொடர்பாக விழிப்புணர்வு கருத்துகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. குடிமை பணி அலுவலர்கள் நாட்டை உருவாக்குவதில் அச்சாணி போன்றவர்கள் என இந்நியாவின் இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய்படேல் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மக்களுக்கு சேவை செய்வதே அரசு பணியாளர்களின் கடமையாகும். விவசாயிகள், மீனவர்கள் மற்றும் அனைத்து தரப்பு பொதுமக்களும் பல்வேறு இன்னல்களை தீர்க்க வேண்டி அரசு அலுவலகங்களுக்கு வருகின்றனர். அலுவலர்கள் அவர்களது பிரச்சனைகளை கனிவுடன் கேட்டாலே மிகுந்த மகிழ்ச்சியடைவார்கள். அரசு அலுவலர்களுக்கும் பல்வேறு பணிச்சுமைகள் இருப்பினும் நம்மை நாமே உச்சாகப்படுத்தி கொண்டு சிறப்பாக பணியாற்றிட வேண்டும். நமது பணியின் போது மக்களுக்கு என்ன, என்ன உதவிகள் செய்தோம் என்பது முக்கியமானது. மக்களுக்கு உதவி செய்வதால் நமக்கும் மன திருப்தி ஏற்படும். அங்கன்வாடி பணியாளர்கள் குழந்தைகளின் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும். மேலும் எடை குறைவான குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் நலனில் அதிக அக்கரை செலுத்த வேண்டும். மக்களின் சேவையை மனதில் கொண்டு அனைவரும் ஒருங்கிணைந்து சிறப்பாக பணியாற்றிட வேண்டும். என பேசினார்.

இவ்விழாவில் திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, உதவி ஆணையர் கலால் திரு.பழனிகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.கணேஷ்குமார், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.இந்திரா, கலால் வட்டாட்சியர் திரு.பால்துரை, மாவட்ட நூலகர் திரு.முத்துகிருஷ்ணன், முதன்மை கல்வி அலுவலக மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.கஜேந்திரபாபு, மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் திரு.தேவானந்த், ரெட்டிங்டன் பவுன்டேஷன் திருமதி.மேகி மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.

**************